**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362 / 2023 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 7 |

| | | |
|---|---|---|
| Name | : | வேலுச்சாமி |
| Father's Name | : | சுப்பராயன் |
| Village | : | பெரம்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Religion | : | இந்து |
| Age | : | 62 |
| ACCUSED | | **அசீம்கான் - ஆஜரில்லை. குவிமுச பிரிவு** 317-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது**. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2025.

**முதல் விசாரணை:-**

நான் காவல் துறை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது பெரம்பலூரில் குடியிருந்து வருகின்றேன். கடந்த 10.10.2022-ம் தேதியன்று நான் பாடாலூர் காவல் நிலைய பணியில் இருந்த போது கே.பாஸ்கரன், வயது 55, த/பெ. கிருஷ்ணசாமி, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப்பெற்று பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 228/2022 சட்டப்பிரிவுகள் இதச 279, 337-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. முதல் தகவல் அறிக்கையும், அதன் அசலையும், அசல் புகார் மனுவினையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.10.2022-ம் தேதியன்று காலை 11.00

மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தினேஷ், ரஞ்சித் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வைமகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 10.10.2022 அன்று பாடாலூர் காவல் நிலையம் முன்பாக வைத்து எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் பாஸ்கரன், பாலமுருகன், கவுதம், தினேஷ், ரஞ்சித் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட T N 46 A B 2830 என்ற கிரைன் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். வழக்கு விபத்தில் காயம்பட்ட ராம்பிரவேஷ்குமார் 18.10.2022 அன்று இரவு 19.30 மணிக்கு இறந்து விட்டதாக கிடைத்த தகவலின் பேரில் வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னுடைய விசாரணையின் போது அ.சா.2 பாலமுருகன், அ.சா.4 கவுசிங் ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக வாக்குமூலம் அளித்துள்ளனர்.

<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 08.10.2022 என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.10.2022 என்றால் சரிதான். இரண்டு நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்ததற்குறிய விளக்கத்தினை புகார்தாரர் குறிப்பிட்டு கூறவில்லையென்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் கால் மணி நேரம் அல்லது அரைமணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் அரைமணி நேரத்தில் இருந்து ஒரு மணி நேரத்திற்குள் வந்து விடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் எண் –15 ல் தேதி குறிப்பிட்டு

நேரம் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். 20.10.2022–ம் தேதியன்று தான் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு வரப்பெற்றதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 10 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டதற்கான காரணத்தை ஆய்வாளர் விசாரணையின் போது நான் சொல்லவில்லையென்றால் எனது வாக்குமூலத்தில் இல்லை. அ.சா.1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகளை நான் விசாரணை செய்து 10.10.2022–ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளின் 161(3) வாக்குமூலத்தை 04.07.2023–ம் தேதி தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 9 மாதம் காலதாமதமாக மேற்படி சாட்சிகளின் 161(3) வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்குண்டான காரணத்தை ஆய்வாளர் விசாரணையின் போது நான் சொல்லவில்லையென்றால் எனது வாக்குமூலத்தில் இல்லை. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் புகார்தாரர் புகார் கொடுக்கவில்லை என்றாலும், அதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று கண்ணுற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லையென்றாலும், பார்வைமகஜர் மற்றும் வரைபட சாட்சிகளை விசாரிக்கவில்லையென்றாலும், மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கவில்லையென்றாலும், எதிரியை சொன்ன இடத்தில் கைது செய்யவில்லையென்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை:– இல்லை.</u>

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**